**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, FAST TRACK MAHILA COURT, THANJAVUR.

**SC. No - 43/2021**

**PW - 7**

| | | | |
|---|---|---|---|
| Name | அண்ணாதுரை | Occupation | |
| Husband/Father's Name | | Village | |
| Age | | Taluk | |
| Date | 15.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(Accused present.)**

முதல் விசாரணை :-

நான் பூக்கொல்லையில் குடியிருந்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும் அவர் பக்கத்து ஊரை சேர்ந்தவர். அவருடைய மனைவி சசிகலாவை தெரியும் அவர் தற்போது உயிருடன் இல்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் இருந்து பேராவூரணி அரசு மருத்துவமனைக்கு எதிரியின் மனைவி இறந்துவிட்டார் என செய்தி கேட்டு அங்கு போனேன். அப்போது பேராவூரணி காவல் நிலையத்தில்இருந்து வந்திருந்தார்கள், என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள் . என்னுடன் ரவிச்சந்திரன் என்பவரும் வந்திருந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில்( ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்) முதலாவதாக இருப்பது என் கையொப்பம் தான். இதனை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் . அந்த கையொப்பங்கள் முறையே அசா4 மற்றும் அசா5. என்னுடன் அன்று ரவிச்சந்திரனும் கையொப்பம் செய்தார். அதன்பிறகு போலிசார் எதுவும் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

போலிஸ் விசாரணையில் கடந்த **01.06.2020** பகல் **12** மணி அளவில் நானும் குருவிகரம்பையை சேர்ந்த ரவிச்சந்திரனும் பூக்கொல்லை பேருந்து நிறுத்ததில் நின்று ொகண்டிருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரியை பேராவூரணி போலிசார் கொலை வழக்கிற்காக எங்கள் முன் வைத்து காரணம் கூறி கைது செய்து, அப்போது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும் நாங்கள் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் அதில் எதிரி குறிப்பிட்ட அவருடைய வீட்டில் எதிர் புறம் உள்ள தென்ம்பிள்ளை பதியத்தின் உள்ளே அவர் மறைத்து வைத்திருந்த இரும்பு புனுடன் கூடிய

இரத்த கறை படிந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மதியம் **01.00** மணிக்கு கைப்பற்றினார் என்றும் அவ்வாறு கைப்பற்றிய போது உள்ள கைப்பற்றுதல் மகசரிலும் நானும் ரவிச்சந்திரனும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் உடனிருந்து விசாரித்த போது சொல்லிவிட்டு தற்போது எதிரி எனக்கு வெகு நாட்களாக பழக்கம் என்பதால் அவரை வழ்கில் இருந்து காப்பாற்ற அரசு வழக்கிற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்ற போது அங்கு எதிரி இருந்தாரா என்றால் எதிரி இருந்தார்.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஓம்/- **A.** தீபா,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.